செ.வெ.எண் : நாள் : 14.09.16

விருதுநகர் மாவட்டம்
அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில்
ஓராண்டு மற்றும் ஈராண்டுகளில் உள்ள தொழிற்பிரிவுகளில்
விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது

----

விருதுநகர் மாவட்ட கலந்தாய்வின் மூலம் ஆகஸ்ட் 2016 ம் ஆண்டு சேர்க்கைக்கு அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஓராண்டு மற்றும் ஈராண்டுகளில் உள்ள தொழிற்பிரிவுகளில் இனஒதுக்கீட்டின் கீழ் சில குறிப்பிட்ட காலியிடங்களை நிரப்பும் பொருட்டு 23.09.2016 முடிய பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு விண்ணப்பம் செய்ய www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பிக்க கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், பயிற்சியில் சேர்ந்து பயன்பெற விரும்பும் மாணவ / மாணவியர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கல்வித்தகுதி 8 ம் வகுப்பு தேர்ச்சி / 10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு ஆண்களுக்கு 14 முதல் 40 வரை ஆகும். பெண்களுக்கு வயது வரம்பு இல்லை. மேலும் அரசு / அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவ / மாணவிகளுக்கு தமிழக முதலமைச்சர் ஆணைக்கிணங்க விலையில்லா மடிக்கணினி, மிதி வண்டி, பேருந்து கட்டணம், கல்வி உதவித்தொகை ரூ.500 /- (வருகைக்கேற்ப), 2 செட் சீருடைகள், 1 செட் மூடுகாலணிகள், மற்றும் பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபட கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் அரசு ஒதுக்கீட்டின் கீழ் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவ / மாணவிகளுக்கு பயிற்சி கட்டணத்தை அரசே வழங்குகிறது. தணியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் மாநகராட்சி மற்றும் நகராட்சியில் சேரும் மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.12000/-ம், கிராமப்புறத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரு மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.10000 /-ம் பயிற்சிக்கட்டணமாக அரசு வழங்குகிறது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அரசு மற்றும் தனியார் துறைகளில் எளிதில் வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளன. எனவே இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்- 04562 - 252382

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்